விஜயபாரதம்
மின்னனுு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 16 புதன் 01.09.2021 மலர் - 2, இதழ் - 148

# விநாயகர் சதுர்த்திக்கு அனுமதி மறுப்பு


விஜயபாரதம்

தி.மு.க துவங்கியது முதலே ஹிந்துக்களுக்கு விரோதமாக செயல்படுவதையே தனது பிரதான கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதற்கு மற்றொரு உதாரணமாக, தி.மு.க தலைமையிலான தமிழக அரசு, கொரோனாவை காரணம் காட்டி, விநாயகர் சதுர்த்தியையொட்டி பொது இடங்களில் விழா கொண்டாடுவதற்கும் சிலைகள் வைப்பதற்கும் அனுமதியில்லை என கூறியுள்ளது. மேலும் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லவும், நீர்நிலைகளில் கரைப்பதற்கும் அனுமதி இல்லை என தெரிவித்துள்ளது.

மக்கள் தங்களது வீடுகளில் விநாயகர் சிலை வைத்து வழிபடவும், தனிநபர்களாகச் சென்று அருகில் உள்ள நீர்நிலைகளில் கரைப்பதற்கும் அனுமதித்துள்ளது. பொதுவெளியில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு செய்யும் நிகழ்ச்சி, சுதந்திர போராட்டவீரர் திலகர் ஆரம்பித்து வைத்த பாரம்பரியம். ஆனால், அதனை கொரோனாவை காரணம் காட்டி மறுக்கிறது தி.மு.க அரசு. கொரோனோ ஊரடங்கில் டாஸ்மாக் மதுபான கடையை மூடாமல் திறந்து வைத்து கல்லா கட்டி வரும் தி.மு.க அரசு, விநாயகர் சிலைகளை வைக்க தடை விதித்திருப்பது பெரும்பான்மை ஹிந்து சமூகத்தினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சினிமா தியேட்டர்களும் மால்களும் திறக்கலாம், பேருந்துகளில் கும்பலாக பயணிக்கலாம், சமூக இடைவெளி இன்றி தமிழக அமைச்சர்கள் தெருவில் விழா நடத்தலாம், வேளாங்கண்ணி சர்ச்சுக்கு தேர் இழுக்கலாம், பக்ரீத் தொழுகையின்போது சமுக இடைவெளி இன்றி நடுரோட்டில் ஆயிரக்கணக்கானோர் தொழுகை நடத்தலாம். ஆனால், ஹிந்துக்கள் மட்டும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடக்கூடாதா?

மது குடிப்பவர்கள் கொரோனோ வழிமுறைகளை பின்பற்றுவார்கள் ஆனால் பக்தியுடன் விநாயகரை வழிபடுபவர்கள் கொரோனோ விதிமுறைகளை பின்பற்ற மாட்டார்களா? ஹிந்து அமைப்புகள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி விநாயகர் சிலைகள் வைக்கப்படும் என உறுதியளித்தும் தி.மு.க அரசு அதனை வேண்டுமென்றே தடுப்பது தவறானது. என ஹிந்துக்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.




விஜயபாரதம்

# தொ.மு.ச. வசூல் பட்டியல்

தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழக போக்குவரத்து கழகங்களில், தி.மு.கவின் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர் வைப்பதுதான் சட்டம் என்றாகிவிட்டது. இந்நிலையில், ஆம் ஆத்மி தொழிற்சங்கத்தினர், தொ.மு.ச., கிளை, மண்டல நிர்வாகிகளின் வசூல் பட்டியலை வாட்ஸ் ஆப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளனர். அந்த பட்டியலில், 'வண்டி போஸ்டிங் பணிக்கு ரூ. 12 ஆயிரம், லைட் டூட்டி ரூ. 25 ஆயிரம், டிப்போ டிரான்ஸ்பர் ரூ. 25 ஆயிரம், ஓ.டி பணிக்கு ரூ. 50 ஆயிரம், தி.மு.க தலைவர்களின் பிறந்த நாள் நன்கொடை ரூ. 1,500, தொ.மு.ச சந்தா ரூ. 500 ஏஜன்ட், ஆளுங்கட்சி தொழிற்சங்கம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. தங்களின் வசூல் பட்டியல் இப்படி பொதுவெளியில் வெளியாகிவிட்டதால் தொ.மு.ச நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.


# சத்ரு சம்ஹார லோக க்ஷேம ஹோமம்



விஜயபாரதம்

சென்னை சேத்துப்பட்டில் உள்ள சங்கரமடத்தின் சங்கராலயத்தில் நமது நாட்டில் பரவியுள்ள நோயினை அகற்றவும், பொருளாதார தேக்கத்தில் இருந்து மீண்டு வரவும் ஹிந்து சமயத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனைகளில் இருந்து விடுபடவும், உலக நன்மைக்காகவும், சத்ரு சம்ஹார லோக க்ஷேம ஹோமங்கள், நடைபெற்றன. 'சுதேசி' பத்திரிகையின் சார்பில் இந்த ஹோமங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பேசிய ஆர்.பி.வி.எஸ்.மணியன், 'நம் தேசத்தின் இன்றைய நிலை மாற வேண்டும். நம்மை என்னென்ன துன்பங்கள் சூழ்ந்துள்ளன, அவை யாரால் ஏற்படுகின்றன என்பதை அறிந்து பரிகாரம் தேட வேண்டும். பகவான் கிருஷ்ணர், 'தர்மத்தை காக்க நான் வருவேன்' என்று கூறியுள்ளார். ஆனால், அவர் வரும் வரை நாம் காத்திருக்கக் கூடாது. நாம் முயற்சிக்காமல் பகவான் வருவார் என கைகட்டி நின்றால் அழிந்தே போவோம். பல கட்சிகளுக்கு தேசத்தை பற்றி அக்கறை இல்லை. நமக்கு தேசப் பற்று மட்டுமே இருக்க வேண்டும், கட்சி உணர்வு கூடாது. சுப்பிரமணிய சுவாமி அசுரர்களை அழித்தது போல, நாட்டை அழிப்பவர்களிடம் இருந்து காக்கவே இந்த யாகம், ஹோமம் எல்லாம்' என கூறினார்.

# விநாயகர் சதுர்த்தியை தடுக்க கிறிஸ்தவர்கள் சதி



விஜயபாரதம்

கோவையை சேர்ந்த செயிண்ட் பால் கல்லூரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகம் சார்பாக அதன் தலைவர் டேவிட் கடந்த 16082021ல் கோவை வாழ் கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், வரும் விநாயகர் சதுர்த்தி அன்று, கிறிஸ்தவர்கள் அவரவர் பகுதியில் வாகனங்களில் சென்று ஜெபம் நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். கடந்த 2017ல் 200 வாகனங்களில் 100 வார்டுகளில் சென்று 'கோவையில் விக்கிரக ஆராதனை இருக்ககூடாது' என அவர்கள் ஜெபித்தனர். அதன் விளைவாக, கலெக்டர் அனுமதியின்றி விநாயகர் சிலை வைக்ககூடாது, சிலையின் உயரம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வருடமும் இதனை சிறப்பாக நடத்த வேண்டும் என கிறிஸ்தவர்களை கேட்டுக்கொண்டுள்ளார். ஹிந்து விழாக்களை தடுக்கும் விதத்திலும் அவர்களது மனதை புண்படுத்தும் விதத்திலும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் அக்கல்லூரியின் தலைவர் டேவிட்டை கைது செய்வதுடன் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு கோவைப் பகுதி மக்கள் முன்வைத்துள்ளனர்.

---

# தமிழக அரசுக்கு கண்டனம்



விஜயபாரதம்

தமிழக அரசு, விநாயகர் சதுர்த்திக்கு தடை விதிக்கக்கூடாது கோவை காமாட்சிபுரி ஆதீனம் சாக்த ஸ்ரீ சிவலிங்கேஸ்வர ஸ்வாமிகள்.

'போலீஸ் பதுகாப்புடன் டாஸ்மாக் நடத்தலாம் ஆனால் விநாயகர் சதுர்த்தி கூடாதா? எதற்காக விநாயகர் சதுர்த்தி பேரணிக்கு மட்டும் தடை? கட்டுபாடுகள் இருக்கலாம் ஆனால் நடத்தவே கூடாது என்று சொல்வதை பா.ஜ.க ஏற்காது. தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை.

விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு தடை, தி.மு.க அரசு ஹிந்துக்களுக்கு அநீதி இழைக்கிறது. அரசு தடுத்தாலும் ஆண்டவன் வழி காட்டுவான். வரும் செப்டம்பர் 2, வியாழக்கிழமை அன்று தமிழகமெங்கும் கோயில்களில் கூடுவோம். இறைவனிடம் முறையிடுவோம். காடேஸ்வரா சுப்பிரமணியம் இந்து முன்னணி மாநிலத் தலைவர்

கடந்த வருடம் நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி இவ்வருட விநாயகர் சதுர்த்தி விழா தமிழகமெங்கும் நடைபெறும். அரசின் கொரோனா விதிமுறைகளை முழுமையாக கடைபிடிப்போம். 1.25 லட்சம் விநாயகர் சிலைகள் இவ்வருடம் தமிழகமெங்கும் வைக்கப்படும். க. பக்தன் இந்து முன்னணி மாநில அமைப்பாளர்.

சமூக வேறுபாடுகளைக் களைந்து அனைத்து சமுதாயத்தினரும் இணக்கமாக கொண்டாடும் விநாயகர் சதுர்த்தியை அரசு தடை செய்வது பாரபட்சமானது. உடனடியாக அரசு தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து விநாயகர் சதுர்த்தி விழாவினை தக்க வழிகாட்டு நெறிமுறைகளுடன் கொண்டாட வழிவகை செய்ய வேண்டும். என்.டி.ஆர் நிறுவனர் அருந்ததியர் விடுதலை முன்னணி.

# ஏழைகளுக்கு 40 லட்சம் வீடுகள்


விஜயபாரதம்


கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு மதுராவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ண ஜென்மபூமி கோயிலிற்கு சென்ற உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்தியநாத் அங்கு வழிபாடு நடத்தினார். பின்னர், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (பி.எம்.ஏ.ஒய்) திட்டத்தின் கீழ், மாநிலத்தில் 2 லட்சத்து 853 பயனாளிகளுக்கு 1,341.17 கோடி ரூபாய் மதிப்பிலான நிதி உதவியை வழங்கினார். அப்போது பேசிய யோகி, 'பிரதமர் மோடியின் முன்முயற்சியின் கீழ், 2022ம் ஆண்டிற்குள், இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் வீடு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த நான்கரை வருடங்களில் உ.பியில் PMAYG, PMAYU திட்டங்களின் கீழ் 40 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளை ஏழைகளுக்கு வழங்கியுள்ளது. 2017க்கு முன்புவரை இதுபோன்ற எந்த வசதியும் உ.பி மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஏழை மக்களுக்கு வீடுகள் வழங்குவதில் தேசத்திலேயே முதலிடத்தில் உள்ளது உத்தர பிரதேச அரசு' என கூறினார்.

# அன்னா ஹசாரே ஆதரவு


விஜயபாரதம்

மகாராஷ்டிராவில் கோயில்களைத் திறக்கவும் பக்தர்களை அனுமதிக்கவும் பா.ஜ.க போராட்டம் நடத்தி வருகிறது. அம்மாநிலத்தில் பல்வேறுத் துறைகளும் வழக்கம்போல செயல்படுகின்றன. கொரோனா தடுப்பூசி போடப்பட்ட மக்களை உள்ளூர் ரயில்களில் பயணம் செய்ய அனுமதித்துள்ளது. ஆனால், கொரோனா பரவலைக் காரணம் காட்டி தொடர்ந்து கோயில்களை மூடிவைத்துள்ளது உத்தவ் தாக்கரே தலைமையிலான மகாராஷ்டிர அரசு. இந்நிலையில், கோயில்களை மூடிவைத்துவிட்டு மதுக்கடைகள், பார்கள் செயல்பட அனுமதிக்கும் அரசின் முடிவை அன்னா ஹசாரே கண்டிக்கிறார். மேலும், கோயில்களில் தடையை நீக்க பக்தர்கள் போராட்டம் நடத்தினால் அதில் கலந்துகொண்டு ஆதரவு வழங்க தான் தயாராக இருப்பதாக ஹசாரே தெரிவித்துள்ளார்.

# தமிழக அரசுக்கு எதிராக போராட்டம்


விஜயபாரதம்

தமிழக அரசு, விநாயகர் சதுர்த்திக்கு பொது இடங்களில் விநாயகர் திருமேனி வைத்து வழிபட அனுமதி அளிக்காததால் ஆயிரக்கணக்கான விநாயகர் திருமேனி செய்து வருகின்ற பொம்மைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனையடுத்து சென்னையில் அந்தத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் விநாயகரை கொண்டு சென்று போராட்டம் நடத்தினர். இதில் பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களை காவல்துறை கைது செய்தது.





விஜயபாரதம்

# வரி செலுத்த கெடு நீட்டிப்பு

சமீபத்தில், வருமான வரித் துறையின் புதிய வலைதளத்தில் தொடர்ச்சியாக ஏற்படும் கோளாறுகள் காரணமாக, ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால், 'வருமான வரி கணக்கு தாக்கல், வரி விலக்கு கோரல் உள்ளிட்டவற்றிற்கு கெடுவை நீட்டிக்க வேண்டும் என, மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து, மத்திய நிதியமைச்சகம் வருமான வரிச் சட்டம் 80ஜி பிரிவின் கீழ், 10 ஏ படிவத்தில் வரி விலக்கு பெற பதிவு செய்ய, விண்ணப்பிக்க 2022 மார்ச் 31 வரை கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. 10ஏபி படிவத்தின் கீழ் விண்ணப்பிக்க 2022 மார்ச் 31 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. நிகழாண்டு ஏப்ரல் ஜூன் காலாண்டு வருவாய் விவரத்திற்கு, படிவம் 15ஜி / 15எச் விண்ணப்பங்களை அளிப்பதற்கான கெடு நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2020 21ம் நிதியாண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கலுக்கான கெடு செப்டம்பர் 30ம் தேதியுடன் முடிவடைகிறது. இக்காலக் கெடுவை நீட்டிப்பது குறித்து மத்திய நிதியமைச்சகம் தனது அறிக்கையில் இதுவரை ஏதும் தெரிவிக்கவில்லை.

# ஹரியானா முதல்வர் கேள்வி



விஜயபாரதம்

மத்திய விவசாய சட்டங்களை எதிர்த்து வன்முறை போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள், விவசாய ஏஜெண்டுகளைத் தடுக்க, அவர்கள் மீது ஹரியானா காவல்துறையினர் தடியடி நடத்தினர். இதனை பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரீந்தர் சிங் கண்டித்தார். ஹரியானா முதல்வர் எம்.எல் கட்டார் ராஜினாமா செய்யக் கோரியதுடன், விவசாயிகளிடம் மன்னிப்பு கேட்கவும் கூறினார். இதற்கு பதில் அளித்த கட்டார், யார் விவசாயிகளின் எதிரி, என் ராஜினாமாவைக் கோர அவர் யார்? எங்கள் விவசாயிகள் யாரும் போரட்டத்தில் ஈடுபடவில்லை. பஞ்சாப் அரசும் காங்கிரசும் வன்முறையைத் தூண்டுகிறது. எங்கள் விவசாயிகளை நாங்கள் உயர்வாக மதிக்கிறோம். நாட்டிலேயே அதிக சலுகைகள் வழங்குகிறோம் என கூறி தனது மாநில விவசாயிகளுக்காக அரசு செய்த பணிகளை எடுத்துக்காட்டும் ஒரு கையேட்டைப் பகிர்ந்து கொண்டார்.

# இலங்கை அவசர நிலை

இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு அதிகரித்துவிட்டது. அவர்களின் மொத்த அன்னிய செலவாணி கையிருப்பு மிகவும் குறைந்துவிட்டது. இதனால், உணவுப் பொருள் விநியோகத்துக்கான அவசரகால விதிமுறைகளை அந்நாட்டு அரசு பிரகடனம் செய்துள்ளது. அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பதுக்குவோருக்கு கடும் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து இவற்றை கடனுக்கு வாங்கி நிலைமையை சமாளிக்க வேண்டிய அவசியம் அந்நாட்டு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.



விஜயபாரதம்


# புதிய பாடத்திட்டத்திற்கு எதிர்ப்பு

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் கல்விக் கௌன்சில், 'பயங்கரவாதத்திற்கு எதிரான, சமச்சீரற்ற மோதல்கள் மற்றும் முக்கிய சக்திகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கான உத்திகள்' என்ற தலைப்பில் புதிய விருப்பப் பாடத்திட்டத்தை சேர்த்துள்ளது. ஜே.என்.யுவில் பி.டெக் பட்டப்படிப்பு முடித்த பொறியியல் மாணவர்கள் அதன் பிறகு, இரட்டைப் பட்டப்படிப்பைத் தேர்ந்தெடுக்கும்போது, அதில் சர்வதேச உறவுகள் எனும் சிறப்புப் பாடப்பிரிவில் எம்.எஸ் படிப்போருக்காக இந்த விருப்பப்பாட திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட்டு கட்சியின் மக்களவை எம்.பி பினோய் விஸ்வம், உள்ளிட்ட பல்வேறு எதிர்கட்சியினர் இந்த பாடதிட்டத்திற்கு எதிராக குரல் எழுப்பியுள்ளனர். அவர்கள் இதனை வரலாற்று சிதைவு, புவிசார் அரசியல், வகுப்புவாதத்தை இது வளர்க்கும், உயர்கல்வியை அரசியலாக்க இது ஒரு தளமாக பயன்படும் என்று கூறிவருகின்றனர். அவர்களின் இந்த கருத்துகள் பயங்கரவாதிகளுக்கு மறைமுக ஆதரவாகவே தெரிகிறது என நெட்டிசன்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



விஜயபாரதம்

# மாவோயிஸ்டுகள் சரண்



விஜயபாரதம்

சி.பி.ஐ மாவோயிஸ்டு அமைப்பை சேர்ந்த பிரபல மாவோயிஸ்ட்டும் மண்டல தளபதியுமான மகாராஜ் பிரமாணிக் ஜார்க்கண்ட் மாநில காவல்துறையிடம் சரணடைந்தார். இவரை குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு ரூ. 10 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டு இருந்தது. இதேபோல, சத்தீஸ்கர் சுக்மா மாவட்டத்தில் நான்கு பெண் மாவோயிஸ்டுகள் உட்பட 15 மாவோயிஸ்டுகள் காவல்துறை மற்றும் சிஆர்பிஎஃப் அதிகாரிகள் முன் சரணடைந்தனர். இவர்களில் 10 பேர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தங்களுக்கு ஆயுதம் வழங்கியவர்கள், மாவோயிஸ்ட் குழு உறுப்பினர்களின் செயல்பாடுகள் போன்ற முக்கியத் தகவல்களை அவர்கள் தெரிவித்தனர். ஒரே நாளில் 16 முக்கிய மாவோயிஸ்ட்டு பயங்கரவாதிகள் சரணடைந்தது அவர்களின் அமைப்பிற்கு மிகப்பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

விஜயபாரதம்



# வெளியேறியது அமெரிக்கா



விஜயபாரதம்

ஆப்கனிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்கா நடத்திய பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் வெற்றி பெறாமலேயே முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் ஆப்கன் தலிபான்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டது. அமெரிக்காவின் அனைத்து ராணுவத்தினரும் ஆப்கனில் இருந்து வெளியேறிவிட்டனர். கடைசி ராணுவ வீரராக மேஜர் ஜெனரல் கிறிஸ் டோனாஹூ அமெரிக்ககடைசி போர் விமானமான சி17ல் காபூலில் இருந்து வெளியேறினார். இதனை, தலிபான்கள் துப்பாக்கியால் சுட்டு கொண்டாடினர். அமெரிக்க ராணுவம் வெளியேறியதன் மூலம் முழுமையான சுதந்திரம் பெற்று விட்டோம் என தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபிஹூல்லா முஜாகித் தெரிவித்தார். அதே சமயம், அமெரிக்க ராணுவத்திற்காக பல ஆண்டுகளாக உழைத்த ஆப்கன் வேலையாட்களில் பலரை நிராதரவாக தலிபான்களின் கைகளில் விட்டுவிட்டு சென்றுவிட்டதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தங்களுக்காக உழைத்த 51 மோப்ப நாய்களையும்கூட அமெரிக்கர்கள் நிராதரவாக விட்டுவிட்டு சென்றுவிட்டனர். அவற்றை மீட்க வேண்டும் என அமெரிக்க முன்னாள் ராணுவத்தினர் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஷாஹித் அப்ரிதி போற்றும் தலிபான்கள்



விஜயபாரதம்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷாஹித் அப்ரிதி, பாகிஸ்தானில் ஒரு ஊடக உரையாடலின் போது, ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை வரவேற்றார். மேலும், 'தலிபான்கள் நேர்மறையான மனதுடன் வந்துள்ளனர். அவர்கள் பெண்களை வேலை செய்ய அனுமதிக்கிறார்கள், தலிபான்கள் கிரிக்கெட்டை விரும்புவார்கள் என்று நான் நம்புகிறேன்' என்று கூறினார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும், தலிபான்கள் 'சாதாரண பொதுமக்கள்' என்று அவர்களுக்கு நற்சான்றிதழ் அளித்தார். ஆனால், தலிபான்கள் கடுமையான முஸ்லிம் ஷரியா சட்டத்தைப் பின்பற்றுபவர்கள். அங்கு கிரிக்கெட் உட்பட அனைத்துவிதமான பொழுதுபோக்குகளும் 'ஹராம்' ஆகும். தலிபான்கள் ஆப்கனைக் கைப்பற்றைய சில நாட்களிலேயே காபூல் விமான நிலையத்திற்கு வெளியே வெடிகுண்டு தாக்குதல்கள், நாட்டுப்புற பாடகர் ஃபவாத் அந்தராபியை கொன்றது, பிரபல நகைச்சுவை நடிகர் நாசர் முகமதுவை தூக்கிலிட்டுக் கொன்றது, ஆப்கனில் பெண்கள் தங்கள் வீரர்களிடமிருந்தே பாதுகாப்பாக இல்லை என்பதை தலிபான்களே ஒப்புக்கொண்டது, பெண்களை வீட்டிலேயே இருக்கும்படி உத்தரவு பிறப்பித்துள்ளது, பர்தா அணியாததற்காக பெண் கொல்லப்பட்டது, 12 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள், பெண்களை கடத்தி செல்வது, பத்திரிகையாளர்கள் கொலை, வெளியேற மிரட்டல் என நீளும் பட்டியல் அவர்களின் உண்மை முகத்தை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

# மாவீரன் பூலித்தேவன்



விஜயபாரதம்

பூலித்தேவன் (1715 1767) நெற்கட்டான் செவ்வலைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டு வந்த பாளையக்காரர். பாரத விடுதலை வரலாற்றில் `வெள்ளையனே வெளியேறு' என்று முதன் முதலாக 1751ம் ஆண்டில் வீர முழக்கமிட்டவர். இதனால் பாரதத்தின் முதல் விடுதலைப்போர் எனக் கருதப்படும் சிப்பாய் கலகத்திற்கு (1857) முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

1750ல் ராபர்ட் கிளைவ் திருச்சிக்கு வந்து ஆங்கிலக் கொடியை ஏற்றிவைத்துவிட்டு தென்னாட்டுப் பாளையக்காரர்கள் தன்னை பேட்டி காண வேண்டுமென்று ஆணவமாக அறிவித்தான். இதனால் வெகுண்டெழுந்த பூலித்தேவன் திருச்சிக்குத் தனது படையுடன் சென்று ஆங்கிலேயரை எதிர்த்தான். இதில் பூலித்தேவனே வெற்றிபெற்றான் என 'பூலித்தேவன் சிந்து' என்ற கதைப்பாடல் கூறுகிறது.

1755ம் ஆண்டு கர்னல் கீரோன், தம் கோட்டையை முற்றுகையிட்டு கப்பம் கட்ட நிர்ப்பந்தம் செய்தபோது தன்னுடைய நிலப்பகுதியில் கப்பம் வசூலிக்கும் உரிமை வெள்ளையருக்குக் கிடையாது என வீர முழக்கமிட்டு விரட்டியடித்து முதல் வெற்றி பெற்றார். அதே ஆண்டில் களக்காட்டிலும், நெற்கட்டும் செவல் கோட்டையிலும் நடைபெற்ற போரில் ஆங்கிலேயரின் கைக்கூலியான மாபூஸ்கானை தோற்கடித்தார். அதனை அடுத்து திருவில்லிபுத்தூர் கோட்டையில் நடைபெற்ற போரில் ஆற்காடு நவாபின் தம்பியைத் தோற்கடித்தார்.

1756 மார்ச்சு மாதம் திருநெல்வேலியில் மாபஸ்கானுடன் புலித்தேவர் நடத்திய போரில் புலித்தேவனின் உயிர்த்தோழன் மூடேமியாவை ஆங்கிலேயர்கள் துண்டு துண்டாக வெட்டி எறிந்ததால் மனமுடைந்த புலித்தேவன் போரை நிறுத்தித் திரும்பினார். அதனால் மாபஸ்கான் திருநெல்வேலியை தன்வசப்படுத்தினான். 1765 அக்டோபர் மாதம் வாசு தேவ நல்லூர் கோட்டையைத் தாக்கிய காப்டன் பெரிட்சன் புலித்தேவனிடம் தோற்றான்.

1760ம் ஆண்டு யூசுப்கான் நெற்கட்டும் செவல் கோட்டையைத் தாக்கியபோதும், 1766ம் ஆண்டு கேப்டன் பௌட்சன் வாசுதேவ நல்லூர்க் கோட்டையைத் தாக்கிய போதும் அவற்றை முறியடித்து வெற்றி கொண்டார். 1766ம் ஆண்டு தொடர்ந்து ஆங்கிலேயரிடம் தலைமைத் தளபதி பொறுப்பேற்றிருந்தவனும், கொடூரமான போர்முறைக்கும் பெயர் பெற்றவனுமாகிய கான்சாகிப்வால், பூலித்தேவரை ஆரம்பத்தில் வெல்ல முடியாமல் சுமார் 12 ஆண்டுகள் போரிட்டான். அதன் பின் பூலித்தேவர் தோல்வியடைந்தார். தலைமறைவானார். நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட ஆங்கிலேயருக்கு எதிரான போர் என்கின்ற வகையில் உதவ வந்த டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியையும் பூலித்தேவர் மறுத்துவிட்டார்.

# வலையில் சிக்கிய மீம்கள்

